செ.வெ.எண்: 92 / ஜுலை / 2021 நாள்:26.07.2021

## செய்தி வெளியீடு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், புங்கனூரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அழகு நாச்சியம்மன் கோவில் முதல் நெடுமலை சாலை வரை ரூபாய் 46.48 இலட்சம் மதிப்பில் 1.95 கி.மீ. நீளத்திற்கு கப்பி சாலை அமைத்தல், ரூபாய் 34.50 இலட்சம் மதிப்பில் பாலம் கட்டுதல், ரூபாய் 16.56 இலட்சம் மதிப்பில் மூன்று சிறுபாலங்கள் கட்டுதல் என மொத்தம் ரூபாய் 97.54 இலட்சம் மதிப்பில் 5 பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று(26.07.2021) தொடங்கி வைத்தார். இப்பணியினை தரமானதாகவும், விரைவாகவும் முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

முன்னதாக சோமரசம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதாரநிலையத்தில், கொரோனா நோயாளிகளின் சிகிச்சை பயன்பாட்டிற்காக ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பழனியாண்டி அவர்கள் தனது சொந்த நிதியில் வழங்கிய ரூபாய் 1 இலட்சத்து அறுபதாயிரம் மதிப்பில் இரண்டு 10 லிட்டர் ஆக்சிஜன் செறிவூட்டிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் அமிர்தாவிடம் வழங்கினார். பின்னர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவ அலுவலரிடம் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்களுக்கு சிறப்பான சிகிச்சை சேவைகளை வழங்கிட அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பழனியாண்டி, ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.கமலம் கருப்பையா, ஊராட்சிமன்றத் தலைவர்கள் திரு.தாமோதரன், திரு.துரைப்பாண்டியன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருச்சிராப்பள்ளி.**